REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

வீரம் தொனிக்கவில்லை!

"கம்யூனிஸ்டுகளுடன் இராணுவ ரீதியில் சமபலத்துடன் இருக்க வேண்டுமென்றால், அதற்கு அணு குண்டு ஆயுதம் ஒன்றுதான் மேற்கத்திய நாடுகளுக்குச் சந்தர்ப்பம் அளிக்கிறது; எனவே, அணு குண்டைத் தடை செய்வதென்பது முட்டாள்தனமாகும்."

இவ்வாறு, வட அட்லாண்டிக் ஒப்பந்த ஸ்தாபனமான 'நேட்டோ'வின் பிரதம சேனாதிபதி ஜெனரல் ஆல்பிரட் கிரெந்தர் கூறியிருக்கிறார்.

மலர் 2] சென்னை: வைகாசி 7உ சனி (21—5—55) ★ ★ வெளியூர்: வைகாசி 8உ ஞாயிறு (22—5—55) [இதழ் 291

அகாலி தளத்தவரின் மொழிவழிக் கிளர்ச்சி

★

கைதானோர் எண்ணிக்கை

500 ஆகிறது!

அமிர்தசரஸ், மே. 20—

அகாலி தளத்தவர் நடத்தி வரும் 'தடை உத்தரவு மீறும்' கிளர்ச்சியின் பத்தாவது நாளான இன்றும் 24 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இதுவரை மொத்தம் இந்தக் கிளர்ச்சியை ஒட்டி கைது செய்யப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை 500 ஆகிறது.

கைது செய்யப்பட்டோர் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

பஞ்சாப் முதன் மந்திரியின் வீராப்பு!

புதுடில்லி, மே. 20—

கிழக்கு பஞ்சாப் மாநில முதன் மந்திரியான லாலா பீம்சேன் சச்சார் 'பஞ்சாபில் நடைபெறும் அகாலி தளத்தவரின் கிளர்ச்சி முழுவதும் கட்டுக்கடங்கிவிட்டது,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சர்தார் ஆஜ்மீர் சிங் என்ற அகாலி எம். எல். ஏ.-யுடன் தான் தொடர்ந்து கிளர்ச்சி பற்றிப் பேசப் போவதாக வெளிவந்த பத்திரிகைச் செய்தியை மறுத்தார்.

பிரச்சினை பற்றி அகாலி தளத்தவருடன் சர்க்கார் சமரசம் செய்து கொள்வது என்ற பிரச்சினையே எழவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பெப்சுவிலிருந்து அகாலி 'ஜதா' ஒன்று பஞ்சாபில் வந்து கிளர்ச்சியில் ஈடுபடப் போவதாக வெளிவந்த செய்திகள் தமக்குத் தெரிந்தன என்றும், அவ்வாறு 'ஜதா' வந்தால், 'அதனை என்ன செய்ய வேண்டும்' என்பதை தான் உணர்ந்தே இருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

பெப்சு முதன் மந்திரியின்

'காங்கிரஸ் போக்கு!'

"பெப்சு மாநிலத்திலிருந்து சிலர் பஞ்சாப் சென்று அகாலிதளத்தவர் நடத்தும் சட்ட விரோதமான கிளர்ச்சியில் பங்கு பெறப் போவதாக நான் அறிகிறேன்;

"அடுத்திருக்கும் மாநிலத்தில் நடைபெறும் கிளர்ச்சிக்காக இந்த மாநிலத்தின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் அத்தகைய செயல்களில் சிலர் ஏன் ஈடுபட வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை; மக்கள் இத்தகைய சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவு தரக்கூடாது,"

என்று பெப்சு மாநில முதன் மந்திரி பிரிஷ் பன் தனக்களிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், தனது மாநிலத்தில் எல்லா அரசியல் கட்சியினரும், எல்லாவகையான சுதந்திரங்களையும் பெற்றிருப்பதாயும், அங்கு எந்தவித தடையுத்தரவும் அமுலில் இல்லை என்றும், எனவே, அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் எவரும் ஈடுபடத் தேவை இல்லை என்றும் கூறியிருக்கிறார்.

முட்டாள்தனமானதாம்! அருவருக்கத்தக்கதாம்!

பண்டிதரின் வழக்கமான வசைபுராணம்!

"பஞ்சாப் மொழி வழங்கும் பகுதிகளைக் கொண்ட பஞ்சாப் மாநிலம் வேண்டும் என்று நடைபெறும் கிளர்ச்சியின் தகுதி பற்றி நான் குறிப்பிடப்போவதில்லை.

"ஆனால், தங்கள் ஆற்றலை இந்த வகையில் வீணாகச் செலவிடுபவர்கள், நம்முன் எதிர்நோக்கியிருக்கிற மிகப் பெரிய பிரச்சினைகளை கவனிக்க முடியாது குறுகிய நோக்கம் கொண்டவர்களாயிருந்தால் பெறும் பிரச்சினைகளை நாம் எப்படிச் சமாளிக்கப் போகிறோம்?

"அமிர்தசரசில் அகாலிதளத்தவர் நடத்திவரும் கிளர்ச்சியைப் போன்று அருவருக்கத்தக்க—வெறுக்கத்தக்க தீய செயல் எதுவுமில்லை.

"இந்தக் கிளர்ச்சி மிகக் குறுகிய மனப்பான்மை கொண்டது—முட்டாள்தனமானது—ஞான சூனியமானது,"

—என்று, இந்தியப் பிரதமர் பண்டித நேரு, பஞ்சாபில், மாஸ்டர் தாராசிங் தலைமையில் உள்ள அகாலிதளத்தவர் அமிர்தசரசில் பஞ்சாப் மொழிவழி மாநிலக் கோரிக்கையை ஒட்டி குரல் கொடுக்கவோ, ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தவோ கூடாது என்று விதிக்கப்பட்டிருக்கும் தடையை மீறி கடந்த 10 நாட்களாக நடத்தி வரும் கிளர்ச்சி பற்றி டில்லியில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டார்: "உலகம் மாறுதலடைந்து கொண்டே இருக்கிறது; இந்த மாறுதல்களையெல்லாம் நாம் சாதாரணமாகப் பார்த்துக் கொண்டிருப்பதில் பலனில்லை. நாம் முன்னேற்றமடைய விரும்பினால், காலத்தின் தேவைகளுக்கு ஏற்றாற்போல் நம் சமுதாயப் பழக வழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்;

"சமுதாயத்திலுள்ள ஒரு சிலரே வாழ்க்கையின் இன்பத்தை அனுபவிப்பது சரியல்ல; இளைஞர்களுக்காவது அந்தச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும்; கல்விக்கான வசதிகள் அளிப்பதுதான் நமது முதல் வேலையாகும்; நாட்டின் வருங்கால 'செல்வங்களா'ன குழந்தைகளை நன்றாகப் பராமரிக்கவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்; இத்தகைய வசதிகளை எல்லோருக்கும் அளிக்கும் முறையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அமைய வேண்டும்."

வருங்காலம் யார் கையில்?

லண்டன், மே. 19—

"இந்தியாவின் வருங்காலம் விஞ்ஞானத்தின் கையில் இருக்கிறது; ஆனால் மனித வர்க்கத்தையே காப்பாற்றும் வேலையே இந்தியாவின் கையில் தான் இருக்கிறது என்று கருதலாம்,"

என்று, பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானி ஒருவர் கூறியிருக்கிறார்.

"வருங்கால நாகரீகம் தீவிர தொழில் நுணுக்கத்தைக் கையாளும் மேல்நாட்டு முறையை ஒட்டியோ அல்லது, 'எதேச்சாதிகாரக் கம்யூனிசமா'கவோ இருக்காது; ஆனால், 'ஆத்மீக' பாரம்பரியம் உள்ளவர்களிடமே அது இருக்கும்,"

என்று, அவர் மேலும் கூறியிருக்கிறார்.

சேனாபதி பாபட் விடுதலையானார்

சேனாபதி பாபட்டை போர்ச்சுகீசிய அதிகாரிகள் விடுதலை செய்து இந்திய யூனியனுக்குள் செல்ல அனுமதித்துவிட்டதாக கோவா தேசியக் காங்கிரஸ் காரியாலயத்திற்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

துப்பாக்கிக்கு நேராக மார்பைக் காட்டினர்!

சேனாபதி பாபட்டை நோக்கிப் போலீசார் சுடுகையில், அவரைக் காப்பாற்றுவதற்காகத் தன்னுடைய மார்பை துப்பாக்கிக்கு நேராகக் காட்டி சியாம் பிரசாத் என்ற தொண்டர் நின்றாராம்; அவரது மார்பில் குண்டு பாய்ந்ததால் அவர் காயமடைந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்க இராணுவ வீரருக்கு 25 ஆண்டு சிறைவாசம்!

அமெரிக்க இராணுவத்தின் இரகசியப் பிரிவிலிருந்து ஓடி ரஷ்ய இராணுவத்துடன் தொடர்பு கொண்டாராம்

பெர்லின், மே 20—

அமெரிக்க இராணுவ இரகசியப் பிரிவை விட்டு ஓடி, ரஷ்ய இராணுவ இரகசிய சர்வீசுடன் தொடர்பு வைத்துக் கொண்டதாக, அமெரிக்க சோல்ஜர் பிரைவெட் வில்லியம் டி. மார்சக் என்பவர் மீது தொடரப்பட்டிருந்த வழக்கொன்றில், அவரைக் குற்றவாளியாகத் தீர்மானித்த, இராணுவ நீதிமன்றம் 25 ஆண்டு சிறை தண்டனை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்படி குற்றவாளியான மார்சக், தம்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கிறாராம்!

கொதிப்பெண்ணெயில் கைவிடும் தொழிலாளர் நிலை

என்று மாறுவது? எப்படி மாற்றுவது?

அன்று சொன்னோம் நாம்— இன்று சொல்கிறார் பண்டித நேரு!

சென்னைக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் இடித்துரை

"உத்தர பிரதேசத்தில் ஒரு அணைக்கட்டு வேலை நடைபெறும் இடத்தில் நடந்த சம்பவம் ஒன்று இன்று மாலை பத்திரிகையில் வந்திருக்கிறது; அங்கு ரூ. 50 திருட்டுப் போய்விட்டதாம்; அதனைப் போக்கடித்துவிட்ட பொது மராமத்து இலாகா கண்டிராக்டரின் குமாஸ்தா ஒருவர், அங்கு வேலை செய்யும் 20 தொழிலாளர்கள் மீதும் சந்தேகப்பட்டாராம்; விசாரித்துப் பார்த்தார்—எவரும் திருடியதாக ஒப்புக்கொள்ளவில்லையாம்; உடனே, 'இந்த இருபது தொழிலாளரில் எவராவது ஒருவர்தானே பணத்தைத் திருடியிருக்க வேண்டும்,' என்றெண்ணி, அந்த இருபது தொழிலாளர்களும் கொதிக்கும் எண்ணெயில் கையை நனைக்க வேண்டும் என்றும், திருடியவர் கைமட்டும் வெந்து கொப்பளிக்கும் என்றும், திருடாதவர் கை வேகாது என்றும் கூறினாராம்; தொழிலாளர்களும் அப்படியே கொதிக்கும் எண்ணெயில் தங்கள் கைகளை நனைத்துப் புண்ணாக்கிக் கொண்டனராம்! இப்படி ஒரு செய்தி இன்று வெளிவந்திருக்கிறது.

"இந்த 'நாணய சோதனை'யை நடத்திய குமாஸ்தா, கொதிக்கும் எண்ணெயில் கைவிடுமாறு தொழிலாளர்களைக் கோரியதுகூட ஆச்சரியமல்ல; அந்த 20 தொழிலாளர்களும் அந்தச் சோதனைக்குச் சம்மதித்து, கையை நனைத்து புண்ணாக்கிக்கொண்டிருக்கிறார்களே, அது, ஆச்சரியத்திற்குரியது மட்டுமின்றி, வேதனையளிப்பதுங்கூட! இந்தச் செய்தி இந்தியாவில் வாழும் தொழிலாளர்களின் நிலை என்ன என்பதை நமக்குச் சொல்வதாக இல்லையா? 'கொதிக்கும் எண்ணெய்க்கு எப்படித் தெரியும்—நாம் திருடினோமா இல்லையா என்பது?' என்ற கேள்வி அந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்படவில்லை.

"கந்தசாமிக் கோனாரா கையை நனைக்கிறார்?—அவர் திருடவில்லையே?—எனவே, அவர் கையை நாம் வேக வைக்கக் கூடாது,' என்று கொதிக்கும் எண்ணெய் அறிந்துகொண்டு, தன் கையைப் 'பதம்' பார்க்காமல் விடும் என்று நம்பி, கையை நனைக்கிறார்களே தொழிலாளர்கள்—இந்த நிலையை எப்போது, எப்படி மாற்றுவது?

"எண்ணெய்க்கு, 'எவன் திருடினான்' என்று அறியும் சக்தி இருப்பதாக—நீதி வழங்கும் ஆற்றல் இருப்பதாக—திருடியவரை மட்டும் பிரித்துப் பார்க்கும் ஆராய்ச்சி உள்ளம் இருப்பதாகத் தொழிலாளர் நம்புகின்றனரே—இந்த நம்பிக்கையைத்தான், தி. மு. கழகத்தவர் 'மூட நம்பிக்கை' என்று எடுத்துக்காட்டுகிறார்கள்."

"இப்படி இந்த நாட்டில் மூட நம்பிக்கையின் அடிப்படையில், கொதிக்கும் எண்ணெயில் கைவிட்டு, 'நாணய சோதனை' நடத்துவதைப்போன்று, எண்ணற்ற மூடப் பழக்கவழக்கங்களில் இந்த நாட்டுத் தொழிலாள பாட்டாளி மக்கள் தங்கள் உழைப்பு, அறிவு, ஆற்றல், நேரம், நினைப்பு அத்தனையையும் பாழாக்கிக் கொண்டிருக்கிறார்கள்; இந்த நிலையில் உள்ள இந்த நாட்டு மக்களை அறிவுவழி நடக்கச்செய்யத்தான் கடந்த 30 ஆண்டு காலமாக திராவிடர் இயக்கத்தவர் பாடுபட்டுவருகின்றனர்."

"சமுதாயத்துறையில், மக்கள் இன்றைய நிலையிலிருந்து மாறி, பகுத்தறிவு வழி நடக்க முற்பட்டாலன்றி, அவர்களுக்குக் கிடைக்கும் வேறெந்தத் துறைமாற்றங்களும் பலன் தரமுடியாது."

"அரசியல் விடுதலை ஒரு காரியத்தைச் செய்ய உரிமையை—சுதந்திரத்தைத் தரக்கூடியது; அவ்வளவுதான். ஆனால், அந்த அரசியல் விடுதலையோ, செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து தந்துவிடாது; காரியம் செய்யப்படுவதற்கான பொருள் தேவை; அது, 'பொருளாதார விடுதலை'யைப் பொறுத்தது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 21—5—'55 சனி

அச்சந்தானே காரணம்?

பாகிஸ்தான் உருவாக்கப்பட்டபோது, பஞ்சாப் மாநிலம் 'கிழக்கு', 'மேற்கு' எனத் துண்டாடப்பட்டது.

இப்போது இந்தியாவின் எல்லைக்குள்ளிருக்கும் கிழக்கு பஞ்சாப், 'இந்தியா' என்ற அரசியல் அமைப்பின் அடிப்படையை உலுக்கும் அரசியல் நிகழ்ச்சிகளின் நிலைக்களனாய் இருந்துவருகிறது.

மாஸ்டர் தாராசிங் என்பவர், பஞ்சாபில் வாழும் சீக்கியர்களின் புரட்சித் தலைவர்; 'சிரோமணி குருத்துவார் பிரபந்தக் கமிட்டி' என்ற சீக்கிய மத நிறுவனத்தின் தலைவரும் கூட! அந்த நிறுவனத்தின் நிர்வாகத்திற்காகக் கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில், மாஸ்டர் தாராசிங்கின் தலைமையில் உள்ள அகாலி தளம், காங்கிரசைப் படுதோல்வியடையச் செய்தது.

இத்தேர்தலில் தாராசிங் பெற்ற வெற்றி, அகாலிதளத்தின் 'பஞ்சாப் மொழி வழங்கும் மாநிலம் தேவை' என்ற பிரதான கோரிக்கைக்கு மேலும் பலத்தைத் தேடித் தந்தது.

"வெறும் மொழி வழி மாநிலத்துடன் சீக்கியர்கள் திருப்தியடைய மாட்டார்கள்; இந்துக்களுடன் ஒன்றி வாழ அவர்கள் விரும்பவில்லை; மாறாக இந்தியாவில் சீக்கியர்கள் பெருவாரியாக வாழும் பகுதிகளடங்கிய சர்வ சுதந்திரமான சீக்கிய நாடு வேண்டுமென்கின்றனர்."

என்று, மாஸ்டர் தாராசிங் தன்னைச் சந்தித்தபோது கூறியதாக, சில மாதங்களுக்கு முன்பு பஞ்சாப் கவர்னர் தகவல் தந்தார்.

'தனி சீக்கிய நாடு' என்ற மூல முழக்கத்தை உள்ளடக்கித்தான் 'பஞ்சாப் மொழி வழங்கும் மாநிலம் வேண்டும்' என்ற முதல் முழக்கத்தை எழுப்புகிறார், தாராசிங் — என்று, வடநாட்டு அரசியல் வாதிகள் அஞ்சுவதை கடந்த ஒரு மாத காலமாக அங்கு நடைபெற்று வரும் சம்பவங்கள் கூறுகின்றன.

மாஸ்டர் தாராசிங், பஞ்சாப் மொழிவழி மாநிலக் கோரிக்கையை எழுப்பியதும், அந்த நாட்டில் உள்ள இந்து மத வெறியர்கள்,வேறு சிலரின் கூட்டுறவுடன் பஞ்சாப், பெப்சு, இராஜஸ்தான், டெல்லி மாநிலத்தின் சில பகுதிகள் ஆகியவைகளை ஒன்றாக இணைத்து 'மகா பஞ்சாப்' என்ற ஒரு பேராசைக் கோரிக்கையை எழுப்ப முற்பட்டனர்.

"இந்தக் கோரிக்கைகளுக்காக, ஊர்வலங்கள் நடத்துவதும், 'மகா பஞ்சாப்' வேண்டும் என்றோ, 'பஞ்சாப் மொழி வழி மாநிலம் வேண்டும்' என்றோ குரல் கொடுப்பதும் கூடாது," என்று, அமிர்தசரஸ் நகரில் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தங்களின் உரிமைக் குரலை எழுப்புவதற்கு விதிக்கப்படும் தடையை, அகாலிதளத்தினர் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கவில்லை.

கடந்த 10 நாட்களுக்கு முன் மாஸ்டர் தாராசிங் தடையை மீறிக் கிளர்ச்சியில் ஈடுபட்டு கைதானார்; தொடர்ந்து நேற்று முன்தினம் வரை, சுமார் 300-க்கும் அதிகமான தொண்டர்களும், மாநில மெங்கணுமுள்ள அகாலிதள முன்னணி வீரர்களும் கைது செய்யப் பட்டிருக்கின்றனர்; தடையுத்தரவு, மேலும் இரண்டு மாதங்களுக்கு நகர நீதிபதி அவர்களால் நீடிக்கப்பட்டிருக்கிறது!

கிளர்ச்சியும், சீக்கியர் தலைவர் தாராசிங்கினுல் நீடிக்கப் பட்டிருக்கிறது!

'மொழிவழி மாநிலம் வேண்டும்,' என்ற கோரிக்கையை நிறைவேற்றுவது, தங்கள் சுதந்திரப்போராட்டகால சாதனைகளாயிருக்குமென்று பேசிவந்த காங்கிரஸ் கட்சியினர், இன்று, அதே மொழி வழி மாநில கோரிக்கை எழுப்புவோரின் குரலை ஒடுக்க முற்படுகிற விந்தை, இந்த இந்தியத் துணைக் கண்டத்தையன்றி வேறெந்த நாகரிகமான பகுதியிலும் நடைபெறுது.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் தோன்றியுள்ள மொழிவழி மாநிலக் கோரிக்கைகளுக்கு தான் நியமித்துள்ள மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை 'சர்வ ரோக சஞ்சீவி' ஆக்கிவிட முயலுகிறது, இந்தியப் பேரரசு.

இதற்குக் காரணம், 'தன் ஆதிக்கம் ஆட்டம் கொடுத்துவிடும்,' என்று அதற்கேற்பட்டுள்ள அச்சத்தைத் தவிர வேறெதுவாக இருக்க முடியும்?

திரு—கொச்சி மாநிலத்தில் நாஞ்சில் தமிழர் கிளர்ச்சியை ஒடுக்க முற்பட்டதும், சித்தூர் எல்லையில் தமிழர் நடத்திய கிளர்ச்சியை ஏசிப் பேசியதும் இந்த அச்சத்தின் விளைவு தானே!

'ஆதிக்கம் உலுக்கப்படுகிறதே' என்ற அச்சம்தானே, பஞ்சாபில் இன்று சீக்கியர்கள் மீது தொடுக்கப்பட்டிருக்கும் அடக்குமுறைக் கணைகள்!

அகாலிதளத்தவரின், 'சீக்கிய நாடு' கோரிக்கையின் நியாய—அநியாயங்களுக்கு விளக்கம் தரும் பஞ்சாபில் உள்ள பீமசேன் சச்சார் என்பவர் தலைமையில் உள்ள காங்கிரஸ் சர்க்காரின் அடக்குமுறை போக்கையும், அதை அனுமதிக்கும் இந்தியப் பேரரசின் ஆதிபத்திய எண்ணத்தையும், பஞ்சாபின் இன்றைய நிலைகளையும் அறிந்து கொள்வது தென்னாட்டவருக்கு அவசியமானதேயாகும்!

ரூ. 16,66,000 செலவில், 23,700 ஏக்கர் நிலங்களை சாகுபடி செய்வதற்குப் பயன்படும்படியான மூன்று நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் பசல்பூரில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மற்றும் 17,000 ஏக்கர் நிலங்களைச் சாகுபடி செய்வதற்குப் பயன்படும்படியாக ரூ 12 லட்சம் செலவில் மூன்று நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் இப்பொழுது தான் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சித்தரஞ்சன் இரயில் எஞ்சின் உற்பத்திசாலை

மேலும் விஸ்தரிக்க முடிவு

புதுடில்லி, மே 19—

சித்தரஞ்சன் இரயில் எஞ்சின் உற்பத்திசாலை விஸ்தரிப்பின் முதற் கட்டத்துக்கு இந்திய சர்க்கார் அனுமதியளித்திருக்கின்றனர். இந்த உற்பத்திசாலையின் இலட்சிய உற்பத்தி அளவு ஆண்டிற்கு 200 இரயில் எஞ்சின்களாக இப்போது உயர்த்தப்பட்டிருக்கிறது.

உத்தேசிக்கப்பட்டிருக்கும் விஸ்தரிப்பு, அதற்காகும் செலவு ஆகியவற்றைப் பற்றிய விரிவான திட்டம் முடிவாக உருவாக்கப்படுவதற்குள், சிப்பந்திகளுக்கு அதிகப்படியாக குடியிருப்பு வீடுகள் கட்டுதல், கட்டிட சமான்கள் வாங்குதல் போன்ற சில குறிப்பிட்ட பூர்வாங்க வேலைகளை இப்போது மேற்கொள்ளலாமென இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். முதற் கட்ட விஸ்தரிப்புக்காக ரூ. 6,88,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

நர்மதை ஆற்றின் மீது பாலம்

ரூ. 30 லட்சம் செலவில் அமையும்

கரேலி, மே 19—

மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள கரேலியிலிருந்து ஒன்பது மைல் தூரத்திலுள்ள பார்மன் என்ற இடத்தில் நர்மதை நதியின் மீது 30 லட்ச ரூபாய் செலவில் ஒரு பாலத்தைக்கட்ட மத்திய சர்க்கார் முடிவு செய்துள்ளது. இந்த வேலை இரண்டு ஆண்டுகளுக்குள் முடிவுற்றுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கரேலியையும் சாகர் என்ற ஊரையும் இணைக்கும் ஒருபாதைக்கான அமைப்பு வேலைகளையும் சர்க்கார் தொடங்கியுள்ளது.

இராஜமகேந்திரபுரம் இரயில் நிலயம்

ரூ. 18 லட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்

தென் பகுதி இரயில்வேயில், வால்டேர்—பெஜவாட மார்க்கத்திலுள்ள இராஜமகேந்திரபுரம் இரயில் நிலயத்தை, 18 லட்சம் ரூபாய்க்குமேல் செலவு செய்து புதுப்பிப்பதற்குரிய திட்டத்திற்கு இரயில்வே குழு அனுமதி தந்துள்ளதாகத் தெரிகிறது.

பள்ளிகளில் கட்டாய சமூக சேவை

மைசூர் மாநிலம் முழுமையிலும் உள்ள ஒவ்வொரு பள்ளிக்கும் சமூக நல ஊழிய வேலைகளைச் செய்ய கட்டாயமாக ஒரு குறிப்பிட்ட இடம் ஒதுக்கப்பட வேண்டுமென மைசூர் மாநில சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனராம்.

புத்த மதக் கோவில் ஆதிக்கத்திற்கு சண்டை?

மணமான மத குருக்களுக்கும், மணமாகாத துறவிகளுக்கும் தகராறு

மணமானவர்கள் கோவில்களைவிட்டு வெளியேற தென் கொரிய சர்க்கார் உத்தரவு

தென் கொரியாவில் 1,200 புத்த தேவாலயங்களில் உள்ள மணமான புத்தமதக் குருக்கள் அனைவரையும், கோவில்களை விட்டு வெளியேறுமாறு சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மணமாகாத புத்தபிட்சுக்களும்' பிட்சுணிகளும், 'கோவிலிலிருந்து மணமான புத்தமதக் குருக்களை வெளியேற்ற வேண்டும்,' என்று கோரி ஒரு வார காலமாக உண்ணுவிரதமிருந்துவந்தனர் என்றும், அவர்களின் கோரிக்கைக்கு இணங்கவே தென் கொரிய சர்க்கார் இந்த உத்திரவைப் பிறப்பித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

வெளியேற்றப்படும் மணமான குருக்கள்மாரின் இடத்தில், மணமாகாத பிட்சுக்களும், பிட்சுணிகளும் நியமிக்கப்படுவர் என்று கூறப்படுகிறது.

பிரிட்டனில் பொதுத் தேர்தல்

இரகசிய 'வோட்' முறை பற்றிய விவரங்கள்

மே 26ந் தேதியன்று, பிரிட்டிஷ் வாக்காளர்கள், காமன்ஸ் சபைக்குத் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வோட்டுச் சாவடிகளுக்குச் செல்வார்கள். பிரிட்டனில் வயது வந்தோருக்கு வாக்குரிமையுண்டு இரகசிய வோட்டு முறையில் வாக்குகள் பதிந்து கொள்ளப்படுகின்றன இவ்வாண்டில், சுமார் 3,50,00,000 வாக்காளர்கள் இருக்கலாம் எனத் தெரிகிறது.

இப்போது பிரிட்டனில் 630 தொகுதிகள் உள்ளன. சென்ற தேர்தலில் 625 தொகுதிகள்தான் இருந்தன. எல்லைக் கமிஷனின் சிபாரிசுக்கு இணங்க சில தொகுதிகள் திருத்தியமைக்கப்பட்டதால் இந்தக் கூடுதலேற்பட்டது. சாதாரணமாக 50,000 முதல் 60,000 வாக்காளர்களுக்கு ஒரு பிரதிநிதி வீதம் தொகுதி நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு தொகுதிக்கும் தேர்தல் அதிகாரி உண்டு. அவர் தேர்தல் ஏற்பாடுகளைச் செய்வார்.

வாக்குப் பதிவாகும் சாவடிகளை நிர்வகிக்க அதிகாரிகள் உண்டு வாக்குப் பதிவு சீட்டுகளைச் சரி பார்த்து, ஒழுங்கான முறையில் பதிவு செய்ய அவர் ஏற்பாடுகளைச் செய்வார்.

சாவடிகளிலும், வாக்குகளை எண்ணுமிடத்திலும் இரகசியம் நிலவ உதவி புரிவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதிமொழி கூறவேண்டும். தேர்தல் சாவடியில் அனாவசியமாகக் கூட்டம் சேர அனுமதிப்பதில்லை. அங்கு ஒழுங்கும் நேர்மையுமே முக்கியமாகும்.

பதிவுச் சீட்டுகளில், அபேட்சகர்களின் பெயர் அகர வரிசையில் ஒன்றன்கீழ் ஒன்றாக அச்சடிக்கப் பட்டிருக்கும். ஒவ்வொரு அபேட்சகருடைய பெயருக்கும் எதிரே 'X' குறிக்கு இடம் விடப்பட்டிருக்கும். தாங்கள் ஆதரிக்கும் அபேட்சகருடைய பெயருக்கு எதிரே குறியிட்டு பெட்டியில போடவேண்டும்.

தேர்தல் தினத்திற்கு முன்பே, ஒவ்வொரு வாக்காளருக்கும், அவருடைய பெயர் வரிசை எண், வாக்குப் பதிவு செய்யவேண்டிய இடம் இவைபற்றி தகவல் அறிவிக்கப்படும்.

காலை எழு மணி முதல் இரவு ஒன்பது மணி வரையில் வாக்குப் பதிவு நடக்கும். பதிவுச்சாவடியில், வாக்காளர் பட்டியலிலுள்ள பெயரைக் குறியிட்டுக் கொண்ட பிறகே ஒவ்வொரு வாக்காளருக்கும் பதிவுச் சீட்டு கொடுக்கப்படும்.

தேர்தல் முடிந்த பிறகு, வோட்டுப் பெட்டிகளை முத்திரையிட்டு பத்திரமாக ஓரிடத்தில் சேகரித்து எண்ணத் தொடங்குவார்கள். அபேட்சகர்களும், அவர்களுடைய ஏஜெண்டுகளும், அதிகாரிகளுமே எண்ணுமிடத்திலிருப்பார்கள்.

தேர்தல் முடிந்த பிறகு பதிவுச் சீட்டுக்களையும் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளையும் ஒரு ஆண்டு காலம் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். இடையில் தகராறு எழுந்தால், தகுந்த அதிகாரிகளால் அவை பரிசீலனை செய்யப்படும். தகராறு நிரூபிக்கப்பட்டால்வெற்றி பெற்றவர் தனது இடத்தை இழந்துவிடுவார்.

அபேட்சகர்களும் தேர்தல் பிரசாரத்திற்காக ஒரு குறிப்பிட்ட தொகைக்கு அதிகம் செலவிடக் கூடாது. சுருங்கக் கூறின், தேர்தலில் ஒவ்வோர் அம்சத்திலும் நேர்மையும், இரகசியமும் கடைப்பிடிக்கப்படுகிறது.

அடுத்த பொதுத் தேர்தல் நடைபெற!

1957-ம் ஆண்டே சிறந்ததாம்!

இந்தியாவின் அடுத்த பொதுத் தேர்தல் நடைபெற 1957-ம் ஆண்டுதான் சிறந்ததாக இருக்குமென்று பிரதம தேர்தல் அதிகாரிகளின் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் கருதுகின்றனராம்.

இந்த மாநாடு இந்தியப் பிரதம தேர்தல் கமிஷனர் திரு. சுகுமார் சென் தலைமையில் ஸ்ரீநகரில் பத்து நாட்களாக நடைபெற்றது.

இந்த மாநாட்டில், வாக்குப் பெட்டிகள், வாக்குரிமைச் சீட்டுகள், வாக்குச் சீட்டு வழங்குதல், வாக்குச் சீட்டை துரிதமாக எண்ணுவதற்கான ஏற்பாடுகள் பற்றிய பிரச்சினைகள் விவாதிக்கப் பட்டனவாம்.

அன்றியும், தேர்தல் சம்பந்தமாக மக்களின் வாக்குரிமைச் சட்டத்தில் ஏற்பட்டுள்ள திருத்தங்கள் பற்றியும், இராணுவத்தைச் சார்ந்தவர்கள் வாக்குரிமையை அளிப்பதற்குரிய அபிவிருத்திகள் பற்றியும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இந்தியா முழுமையும் மதுவிலக்கை அமுல் செய்தால்.....!

ரூ. 40 கோடி ஆண்டுதோறும் நஷ்டமாகும்!

"இந்தியா முழுமையிலும், மதுவிலக்கு அமுல் செய்யப்படுமாளுல், மொத்த வருமானத்தில் ரூ 40 கோடி ஆண்டு தோறும் நஷ்டமாகும்,"

என்று, மதுவிலக்கு விசாரணைக் குழு கணக்கிட்டிருக்கிறது.

மதுவிலக்கை அமுல் செய்வதற்கு, நிதி நிலை குறுக்கே நிற்பதாக மதுவிலக்குக் குழுவிடம் தெரிவித்திருக்கும் மாநிலங்களில், வங்கம், பெப்சு, ஐதராபாத் ஆகிய மாநிலங்களும் இடம் பெற்றிருக்கின்றனவாம்.

இந்த மாநிலங்கள், மதுவிலக்கு அமுல் செய்யப்படுவதை ஆதரிப்பதாகவும், ஆனால், அதனால் சரியக்கூடிய வருமானத்தைச் சரிக்கட்ட வழியும் சொல்லித் தரவேண்டும் என்று அவை கோருவதாயும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மதுவிலக்கை அமுல் செய்வதினால் வங்கத்திற்கு ரூ. 5 கோடியும், ஐதராபாத்திற்கு ரூ 9 கோடியும் நஷ்டமாகுமெனவும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

பம்பாய், சென்னை மாநிலங்கள் மதுவிலக்கை அமுல் செய்திருந்த போதிலும், அவற்றின் அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்படவில்லை என்றும், ஏனெனில் அவை வருமானத்திற்கு வேறு வழிவகைகளைத் தேடிக்கொண்டன என்றும் கூறப்பட்டிருக்கிறது.

குடலுக்குள் ஆயுதத்தை வைத்து மூடிவிட்ட டாக்டர்!

கவனக் குறைவிற்காக 200 டாலர் அபராதம் விதிக்கப்பட்டார்

பாரிஸ், மே 20—

'ஹெர்னியா' என்றழைக்கப்படும் குடல்வாத நோயினுல் மிக அவதியுற்று, மருத்துவர் ஒருவரிடம் சிகிச்சை பெற்றுக்கொள்ள வந்த நோயாளி ஒருவரை, மருத்துவர் இரண சிகிச்சை செய்து குணப்படுத்தியிருக்கிருர். ஆனுல், இரண சிகிச்சை செய்த மருத்துவர், தமது கவனக்குறைவால், தாம் இரண சிகிச்சைக்காக உபயோகித்த ஆயுதம் ஒன்றை, மறதியாக அவரது குடலிலேயே வைத்துவிட்டு, குடலையும் வெளியே தைத்துவிட்டாராம்!

சிகிச்சையின் மூலம் குணமடைந்த நோயாளி, இந்தச் சம்பவம் நிகழ்ந்து 3 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு சிறு மோட்டார் விபத்துக்குள்ளாகியிருக்கிருர். அப்போது அவர் உடலை 'எக்ஸ்-ரே' எடுத்துப் பார்த்ததில் அவரது குடலுக்குள் அந்த ஆயுதம் புதைந்துகிடந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது!

இந்த விபத்திற்காக, அந்த மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி நஷ்டஈடு கொடுக்கவேண்டியிருந்தது; ஆனுல், விபத்துக்குள்ளான மேற்படி நோயாளியின் குடலிலிருந்து டாக்டர் 'மறதியாக' விட்டுவைத்த ஆயுதத்தை எடுப்பதற்கு பணம் தர அந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மறுத்து நீதி மன்றத்தில் மனுச் செய்து கொண்டதாம்.

மனுவின் மீது நடைபெற்ற விசாரணையின்போது, நீதிமன்றம், மேற்படி நோயாளியின் குடலிலிருந்து ஆயுதத்தை எடுக்க மறந்துபோன மருத்துவரின் கவனக் குறைவிற்காக அவருக்கு 200 டாலர் அபராதம் விதித்திருக்கிறதாம்!

இந்து திருமணச் சட்டம்

குடியரசுத் தலைவரின் அங்கீகாரம்

புதுடில்லி, மே 19—

1955-ம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம், சென்ற புதன் கிழமையன்று, குடியரசுத் தலைவர் இராசேந்திரரால் அங்கீகரிக்கப்பட்டு, உடனடியாக அமுல் நடத்தப்படுகிறது.

இந்தச் சட்டம், நாடு முழுமையிலுமுள்ள எல்லா இந்துக்களின் பிரச்சினைகளிலும் ஒரே தாரத் திருமணச் சட்டத்தை அமுல் நடத்தும் நோக்கம் கொண்டதாகும்.

சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் கணவனே அல்லது மனைவியோ விவாக ரத்து கோரினுல், அதற்கும் இச்சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் வடக்கு பகுதியிலும், தென் பகுதியிலும், இறந்துபோன சகோதரனின் மனைவியை மணந்து கொள்வது போன்ற மற்றும் சில வகை திருமணங்கள் நடைபெறுவதை அனுமதிக்கும் வகையில், இச்சட்டத்தில், திருமண சம்பந்தமான நடைமுறைகள் பற்றி பழக்க வழக்கத்தில் இருந்துவரும் மாறுபாடுகள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்டுவிட்டனவாம்.

இதுபோலவே, சென்னை, திரு-கொச்சி ஆகிய மாநிலங்களில் அமுலிலிருந்து வரும் விசேட சட்டங்கள் மூலமாகவோ அல்லது, பழக்க வழக்கத்தின் மூலமாகவோ விவாக ரத்து பெறுவதற்கென்றுள்ள உரிமைகள் எதுவும் இச்சட்டத்தால் பாதிக்கப்படாது என்றும் கூறப்படுகிறது.

பாக். ஆப்கன் எல்லை மூடப்பட்டதாம்!

கராச்சி, மே 18—

இத்திங்கள் 14-ந் தேதியிலிருந்தே ஆப்கானிஸ்தான் — பாகிஸ்தான் எல்லை பெரும்பாலும் மூடப்பட்டுவிட்டன என்று கராச்சியிலுள்ள ஆப்கன் தூதுவர் தெரிவித்திருக்கிருர்.

பாகிஸ்தானிலிருந்து பொருட்களை ஆப்கானிஸ்தானத்திற்கு ஏற்றிச் சென்ற ஏராளமான மோட்டார் லாரிகள், பாகிஸ்தான் எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் தகவல் கிடைத்திருக்கிறது.

சவூதி அரேபியா போன்ற நேச நாடுகளின் மூலமாக, பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் தகராறைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற நேரத்தில், எல்லை மூடப்படுவதை ஆட்சேபித்து, பாகிஸ்தான் அயல் நாட்டு அமைச்சரிடம் ஆப்கானிஸ்தான் தூதுவர் ஆட்சேபக் குறிப்பொன்றைத் தந்திருக்கிருராம்.

காலனி அபிவிருத்திக்கு 12 கோடி பவுன்கள்!

காலனிகளில் அபிவிருத்தித் திட்டங்களை நடத்த அடுத்த ஐந்து ஆண்டுகளுக்காக 12,00,00,000 பவுன் மானியமாக வழங்க பிரிட்டிஷ் சர்க்கார் நிச்சயித்திருக்கிறதாம்.

சமூக, ஆர்த்தீக முன்னேற்றங்களுக்காக திட்டங்கள் வகுக்கப்பட்டாலும், இலாபங்கிடைக்கக் கூடியவற்றுக்கு சலுகை காட்டப்படுகிறதாம்.

விபசாரம் செய்த திபெத்தியர்கள்

நாடு கடத்தப்படுகின்றனர்

கல்கத்தா, மே 18—

இந்தியாவிற்கு திபெத்திலிருந்து பெண்களைத் தருவித்து விபசாரத் தொழில் நடத்தியதாக கடந்த சில ஆண்டுகளில் 66 திபெத்தியர்கள் நாடு கடத்தப்பட்டதாக கல்கத்தா இரகசிய போலீஸ் அதிகாரி கூறியிருக்கிருர்.

அதே குற்றத்திற்காக இன்னும் பலர் நாடு கடத்தப்படவிருப்பதாகவும் அவர் கூறினுராம்.

கல்கத்தாவின் பல பகுதிகளிலும் சுமார் 4,000 பெண்கள் விபசார விடுதிகளில் இருப்பதாகவும், பெரும்பாலோர் திபெத், காசி, மற்ற மாநிலங்களிலிருந்து வந்திருப்பதாகவும் தகவல் தந்துள்ளனர்.

அரிய சாதனை!

புதுடில்லி, மே. 18—

மார்பில் கத்திக் குத்துக் காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட 18 - வயதுடைய வாலிபனின் இருதயத்தைத் திறந்து டில்லி டாக்டர் ஒருவர் வெற்றிகரமான 'ஆபரேஷன்' செய்திருக்கிற தகவல் எட்டியுள்ளது.

மருத்துவ மனைக்கு வரும்போது அவ்வாலிபனுக்கு நாடித் துடிப்பே இல்லையாம்; உடனே இரத்தம் செலுத்தி, மீண்டும் நாடித் துடிப்பு ஏற்படுத்தினுர், டாக்டர்.

பின்னர், அறுபட்டிருந்த இருதய இரத்தக் குழாய்களையும், ஒரு நரம்பையும் சரிப்படுத்தியதில், வாலிபன் பிழைத்துவிட்டான் என்று தெரிய வருகிறது.

கட்டாய உடல் உழைப்பு தரக் கோரும் சட்டம்

மத்திய பாரத் மாநிலத்தில் நிறைவேற்றம்

இந்தூர், மே 20—

மத்திய பாரத் மாநிலத்திலுள்ள பஞ்சாயத்துப் பிரதேசங்களில் வாழும் 21 முதல் 50 வயது வரையுள்ள எல்லா நபர்களும் ஆண்டொன்றில் 5 நாட்கள் தங்கள் தங்கள் பஞ்சாயத்துப் பிரதேசங்களில் நடைபெறும் அபிவிருத்தித் திட்ட வேலைகளில் கட்டாயமாக வேலை செய்யவேண்டும் என்று. மத்திய பாரத் மாநில சட்ட சபையில்நிறைவேற்றப்பட்ட பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் மூலம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு நபருக்கும் தகுந்த வேலையை அந்தந்தப் பஞ்சாயத்துக்கள் நிர்ணயிக்குமாம்.

இவ்வாறு கட்டாயப்படுத்தியும் வேலை செய்ய மறுப்பவர்கள், தங்களுக்குத் தரப்படும் வேலைக்கு எவ்வளவு கூலி தரப்படுமோ, அதே போன்று இரட்டிப்பு மடங்கு பணம் பஞ்சாயத்திற்குத் தர வேண்டுமாம்.

இந்தக் கட்டாய உடலுழைப்பிலிருந்து பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், முனிசிபல் நகரங்களில் வசிப்பவர்களுக்கும் விலக்களிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

'சிரம தான'த்திற்குப் பொது மக்களின் ஆதரவைத் திரட்டவே இம்மாதிரிச் சட்டம் இயற்றப்பட்டிருப்பதாகச் சர்க்கார் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நீண்ட நேர சூரிய கிரகணம்!

1,250 ஆண்டுகளில் காணப்படாததாம்!

விரிவான ஆராய்ச்சி நடத்த விஞ்ஞானிகள் புறப்பாடு

வருகிற ஜூன் மாதம் 20-ந் தேதியன்று நீண்ட நேர சூரிய கிரகணம் காணப்படும் என்று கூறப்படுகிறது. இந்த சூரிய கிரகணம் கடந்த 1,250 ஆண்டு காலத்திற்கிடையில் இதுவரையிலும் காணப்பட்டிராத அளவிற்கு வெகு நீண்டநேரத்திற்கு காணப்படுமாம்.

சூரிய பௌதிக ஆராய்ச்சி சம்பந்தமாக விரிவான சோதனைகளையும்,ஆராய்ச்சிகளையும் நடத்துவதற்காகச் செல்லவிருக்கும் இந்திய விஞ்ஞானிகளில் ஒரு குழுவினர், வானிலை ஆராய்ச்சி நிலைய டெபுடி டைரக்டர் ஏ. கே. தாஸ் என்பவரின் தலைமையில் இலங்கைக்குப் புறப்பட்டுவிட்டதாகவும், அவர்கள் இலங்கையில், நேரிடையாகச் சூரிய கிரகணத்தைப் பார்த்து ஆராய்வதுடன், ரேடியோ வான மண்டல ஆராய்ச்சி, நிலகாந்த ஆராய்ச்சி ஆகியவைகளையும் நடத்துவர் என்றும் கூறப்படுகிறது.

இவர்களைத் தொடர்ந்து, அடுத்த இரண்டாவது ஆராய்ச்சிக் குழுவினரும் விரைவிலேயே இலங்கை செல்வர் என்று தெரிகிறது.

இந்த விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சியை நடத்துவதற்கென, கொழும்பு நகரிலிருந்த சுமார் 130 மைல் தூரத்திற்கப்பாலுள்ள ஹிங்குரகோடா எனுமிடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

விவசாய அபிவிருத்தி

மாநிலங்களின் தேவைகளை நிர்ணயிக்க மாநாடு

மத்திய சர்க்கார் திட்டங்கள் மாறக்கூடும்?

இத்திங்கள் 26-ந் தேதியன்று புதுடில்லியில், 27 மாநிலங்களைச் சேர்ந்த விவசாய இலாகா காரிய தரிசிகளின் மாநாடு ஒன்று நடைபெறும் எனவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ 650 கோடி செலவில் வகுக்கப்பட்டுள்ள விவசாய அபிவிருத்தித் திட்டம்பற்றி மாநாடு ஆலோசனை நடத்துமென்றும் தெரிகிறது.

இந்திய சர்க்காரின் உணவு, விவசாய இலாகா விவசாய அபிவிருத்திக்கென தற்காலிகமாகத் தீட்டியுள்ள திட்டப்படி, மத்திய சர்க்கார் தனது சொந்தத்தில் ரூ. 43 கோடியும், மாநில சர்க்கார்கள் தமது சொந்தத்தில் ரூ. 92 கோடியும், மத்திய சர்க்காரும் மாநில சர்க்கார்களும் கூட்டாகச் சேர்ந்து ரூ. 558 கோடியும் செலவிடுமாம்.

மாநிலங்களின் தேவைகள் மட்டுமல்லாமல், திறமையையும் அடிப்படையாகக் கொண்டு வேலைகளின் அளவுகளும், செலவுகளும் இந்த மாநாட்டில் நிர்ணயிக்கப்படும் என்று தெரிகிறது. இந்த மாநாட்டின் விளைவாக, மத்திய சர்க்கார் கூட தங்கள் உத்தேசத் திட்டங்களை மாற்றிக் கொள்ளக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

1954, ஏப்ரல்—செப்டம்பரில், தேசியசாலைகள் திட்டத்தின்கீழ், 30 மைல்கள் அளவுக்கு புதிய பாதைகள் அமைக்கப்பட்டன; 334 மைல்கள் அளவுக்கு ஏற்கெனவேயுள்ள பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன; 5 பெரிய பாலங்கள் கட்டப்பட்டன.

சங்கரநயினுர் கோவில் கைத்தறி நெசவாளர் சங்கப் பொதுக் கூட்டம்

இந்நகர் கைத்தறி நெசவாளர் சங்கப் பொதுக்கூட்டம், 13-5-55 இரவு 8 மணிக்கு, மாதாங்கோவில் தெருவில், நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் அ. நாராயணன் அவர்களும், மற்றும் பல தோழர்களும் பேசிய பிறகு, தோழர் இரா. பழனிவேலு (தி. மு. க.) எஸ் உலகநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

பிறப்பு

வந்தவாசி விருதூர் தோழர் அரவரசு அவர்களது துணைவியார் சுயமணி அம்மையார் 14—5—55 அன்று ஓர் பெண் மகவுக்குத் தாயாஞர். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப் பெற்ருேம்—நன்றி — பொறுப்பாளர்.

* * *

திருச்சி சங்கிலியாண்டபுரம் கழகத் தோழர் க. கருப்பையா அவர்களின் துணைவியார் குப்பாய் அம்மையார் 13—5—55ல், ஓர் பெண் மகவுக்குத் தாயாஞர். அதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது —வரப்பெற்ருேம்—நன்றி—பொறுப்பாளர்.

மறைவு

ஆரணி தி. மு. கழகத் தோழர் சபியுல்லா, 12—5—55-ல் மரணமுற்றது குறித்து கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. தோழர் சபியுல்லா 21 வயதுடைய இளம் இயக்கப் பணியாளர். சென்னையில், அரசியல் கலைக் கல்லூரியில், பி. ஏ., வகுப்பு படித்துக் கொண்டிருந்தகாலை, கல்லூரியின் அழைப்பிற்கிணங்கி திருக்கழுக்குன்றம் எனும் ஊருக்கு அருகாமையில் சமூகநல ஊழியப் பயிற்சிக்காகச் சென்றபோது, அவ்விடத்தில் குளிக்கச் செல்லுகையில், ஒரு; கிணற்றில் விழுந்து மரணமுற்ருர்.

மே தின விழாக் கூட்டங்கள்

★

விழுப்புரம்

15—5—55 மாலை 6 மணிக்கு, விழுப்புரம் தி. மு. கழகச் சார்பில், மே தின விழா, தோழர் இரா. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது. தலைமையுரைக்குப் பின், தோழர்கள் எம். எஸ் இராமசாமி, சு. சித்தார்த்தன், சாமிநாதன், ந. அன்பரசு ஆகியோர் மே தின விழா பற்றியும், திராவிடம் பிரிய வேண்டியதின் அவசியத்தை விளக்கியும், தொழிலாளர்களிடையே தி. மு. கழகத்தின் பங்கை விவரித்தும் சொற்பொழிவாற்றினர். தோழர் இரா. சாம்பசிவம் அவர்களுக்கு விழுப்புரம் தி. மு. கழகச் சார்பில் பாராட்டுரை வழங்கப்பட்டதுடன், அவருக்கும் மற்ற தோழர்களுக்கும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

தேவாரம்

13—5—55-ல், தேவாரம், பன்னீர் செல்வம் படிப்பகச் சார்பில், வ. உ. சி. திடலில் தோழர் நவமணி தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் கே வி. கே. சாமி, கா. நடராஜ், ஓ. கிருட்டிண மூர்த்தி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கண்ணமங்கலம்

9—5—55ல், மேதின விழாவும், அன்று இரவு தி. மு. கழக குழுவினரால் 'தூக்கு மேடை' எனும் நாடகமும் நடைபெற்றது. விழாவிற்கு தோழர் தருமராசன் தலைமை தாங்கினர். தோழர்கள் சி. பி. சிற்றரசு, போளூர் சுப்பிரமணியம், முல்லை-சத்தி, நெடுஞ்சேரன், கருத்தோவியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அம்பேத்கார் 64-வது பிறந்த தினக் கூட்டம்

★

சாத்தனூர்

14—5—55-ல், விழுப்புரத்தை அடுத்த சாத்தனூர் பாடசாலை மைதானத்தில், தோழர் எஸ். ஏ. ஏழுமலை தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. எம். சாமி, ஜே. எல். ஆதிமூலம், சி. எம். ஆறுமுகம், எம். ஆதிமூலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

செங்கல்பட்டு

15—5—55 மாலை 6 மணிக்கு செங்கல்பட்டு குழந்தைகள் பராமரிப்பு மைதானத்தில் தோழர் ஜே. சி ஆதிமூலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். ஆதிமூலம், ஏ. இரத்தினம் எம். எல். ஏ., சி. எம். மணவாளன், சி. எம். காசப்பா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அரக்கோணம்

15—5—55 மாலை 3 மணிக்கு அம்பேத்கார் அவர்களின் உருவப் படம் அலங்கரிக்கப்பட்டு, ஊர்வலமாக முக்கிய வீதிகள் வழியாக எடுத்துச் செல்லப்பட்டது. மார்க்கெட் மைதானத்தில் ஊர்வலத்தில் வந்தவர்களுக்கு பானங்கள் வழங்கப்பட்டது. பின்னர், தோழர் கே. எம். சாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் எம். ஏ. அமலோற்பவம், சி. எம். ஆறுமுகம் ஆகியோர் அம்பேத்காரைப் பாராட்டிப் பேசினர்.

ஒக்கரை திருவள்ளுவர் படிப்பக முதலாண்டு விழா

15—5—55 மாலை 7 மணிக்கு ஒக்கரை திருவள்ளுவர் படிப்பக முதலாவது முத்தமிழ் ஆண்டு விழா தோழர் பி. அரங்கசாமி எம். எல். ஏ., தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் ச. கணபதி, இலக்குமணன், வெங்கிடசாமி ஆகியோர் இயல், இசை, நாடகத் தமிழ் பற்றிப் பேசினர்.

கழகக் கூட்டங்கள்

★

கொல்லுமாங்குடி
23—5—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: என். கிட்டப்பா
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
கே. எஸ். சௌந்தரராசன்
வி. ஏ. பாண்டியன்

★

நங்கவள்ளி
23—5—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கோ. ல. நரசிம்மன்
பேசுபவர்:
க. அன்பழகன்

★

திருவிளையாட்டம்
24—5—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: வேணுகோபால்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
என். கிட்டப்பா
கே எஸ். சௌந்தரராசன்

★

பெரியவள்ளூர்
22—5—55 மாலை 6 மணிக்கு நடைபெறும். தோழர்கள் க. அறிவழகன், மன்னர்மன்னன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

21—5—55 இரவு 8 மணிக்கு, சென்னை 44-வது வட்ட (மயிலை) தி. மு. கழகப் பணிமனையில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, மாவட்டச் செயலாளருக்குப் பாராட்டு, கழகப் பொருளாதார நிலை, கழக வரவு—செலவு, மற்றும் சில பிரச்சினைகள் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை 5-வது வட்ட தி.மு கழக பொதுஉறுப்பினர்கட்கு

22—5—55 காலை 9 மணிக்கு சென்னை 5-வது வட்ட தி மு கழக இல்லில், பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

வரவேற்பும், பாராட்டும்

22—5—55 மாலை 5 மணிக்கு, சென்னை 42-வது வட்ட தி மு க. பணிமனை (எண் 4, நமசிவாய முதலி தெரு, திருவல்லிக்கேணி)யில் சென்னை மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அவர்களுக்கு வரவேற்பும், முன்னாள் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டமும் நடைபெறும்.

மறுமலர்ச்சி மன்றம் ஆண்டு விழா

திருவையாற்றை அடுத்த புனவாசல் கிராமத்தில், தோழர் சா. சண்முகம் தலைமையில் நடைபெறும் தோழர்கள் அன்பில் தருமலிங்கம், அரங்கராசன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

(தேதி குறிப்பிடப்படவில்லை)

சொற் பயிற்சிக் கூட்டம்

22—5—55 காலை 9 மணிக்கு சென்னை, முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றத்தில். தோழர் கே. ஜி. பாண்டியன் தலைமையில், 'நாட்டுப் பிரிவினை ஏன்?' என்னும் பொருள் பற்றி மன்றத் தோழர்கள் பேசுவர்.

நகர இளைஞர் கழகம்

22—5—55 காலை 8 மணிக்கு தோழர் எம். துரைக்கண்ணு தலைமையில், சுகாதாரத் தொண்டர்கள் சென்னை, கூளை, குமாரசாமிராஜ புரத்திற்குச் சென்று சுகாதாரப் பணியாற்றுவார்கள்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் சேலம் வருகை

★

22-5-55 மாலை 6½ மணிக்கு, சேலம், விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில், சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பும்—பாராட்டும் அளிக்கப்படும்.

அன்று மாலை 4-30 மணிக்கு, தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில், சேவ்வாய்ப்பேட்டை ராஜேந்திரா சத்திரத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு வி. மார்க்கெட் வந்து சேரும்.

சென்னை 39-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

22—5—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, கழக கட்டிடத்தில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

தன்னைப்பற்றி நேரு!

"வயோதிகத்தின் காரணமாக நான் அயர்ந்து போகவில்லை; மாறாக, ஒரு மாணவனைப்போல் விறுவிறுப்பான உள்ளத்துடன் தான் நான்இருந்துவருகிறேன்." என்று புதுடில்லியில் நடைபெற்ற மாதர் மாநாட்டில் பேசுகையில் பிரதமர் நேரு பண்டிதர் கூறியிருக்கிறார்.

"ஆண்டு தோறும் எனது வயது அதிகரிக்கிறது. ஆனால் மாணவனைப் போல், உள்ளம், புதிய புதியக் கருத்துக்களில் மூழ்கித் திளைக்கிறது,"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சோதிப்பெண்ணையில் கைவிடும்...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"ஆனால், காரியத்தைச் செய்வதற்குத் தேவையான சுதந்திரம், தேவையான பொருள் இரண்டும் கிடைத்துவிட்டால் மட்டும் போதாது; அந்தக் காரியத்தை எப்படிச் செய்வது என்ற அறிவுத் தெளிவும் வேண்டும்; 'அந்த அறிவுத் தெளிவை இந்த நாட்டு மக்கள் பெற்றில்லாதவரையில், அவர்களுக்கு அரசியல் சுதந்திரமும், பொருளாதார விடுதலையும் கிடைத்துவிட்டால மட்டுமே அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்துவிட முடியாது—முழு மனிதர்களாக வாழ்ந்துவிடுவது சாத்தியமில்லை,' என்று தி. மு. கழகம் கருதுகிறது.

"பண்டித நேரு அவர்கள் இன்று காலை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் ஏழு நாட்கள் நடைபெறும் பெண் அமைப்பாளர்கள் மாநாடு ஒன்றைத் துவக்கிவைக்கையில், 'பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றியடைவதற்கு இந்தியாவின் சமூக அமைப்பில் மகத்தான மாறுதல்கள் ஏற்பட வேண்டுவது அவசியம்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"'ஒரு பெரும் சமூகப் புரட்சி ஏற்பட்டாலன்றி, நமது ஐந்தாண்டுத் திட்டங்களும், இதர அபிவிருத்தி வேலைகளும் எந்தவிதத்திலும் உபயோகப்படமாட்டா' என்றும், 'அந்த சமூக மாற்றத்தை உருவாக்குவதில் பெண்கள்தான் பெரும் பங்கு ஏற்கவேண்டும்,' என்றும் வரையறுத்துக் கூறியிருக்கிறார்;

"இதனைத்தான் கடந்த முப்பதாண்டுக் காலமாக திராவிட இயக்கத்தவர் இந்த நாட்டு மக்களிடையே எடுத்துக்கூறி வருகின்றனர்."

— இவ்வாறு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சென்னை அமைந்தகரை அறிவியக்க மன்றச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை அமைந்தகரை அறிவியக்க மன்ற துவக்க விழாப் பொதுக்கூட்டம் 20—5—55 - மாலை 7-30 மணியளவில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் வி. இளஞ்சேரலாதன் தலைமை தாங்கினார்.

தோழர் புகழேந்தி ஆர். எஸ். பாண்டியன் சிறிதுநேரம் பேசியதும், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அரியதோர் உரையாற்றினார்.

அவருக்குக் கைத்தறி ஆடையும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன. கூட்டத்திற்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

தலைவர் முடிவுரைக்குப் பின், மன்றச் செயலாளர் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

★

தொடர்ந்து பேசிய பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள், சமுதாயத் துறையில் இந்த நாட்டு மக்கள் கொண்டுள்ள மூடநம்பிக்கைகளை ஆதாரங்களுடன் குறிப்பிட்டு, அவை எப்படி எல்லாம் இந்த நாட்டு மக்களின் வளர்ச்சியை—முன்னேற்றத்தைத் தடுத்து வாழ்வைப் பாழாக்குகின்றன என்பதையும் விளக்கிக் காட்டி, அவற்றிற்குப் பரிகாரமெல்லாம் இந்தச் சமூக அமைப்பு சீர்திருத்தப்பட வேண்டும் என்பது தான் என்று கூறினார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிதிக்காக

சிறப்புக் கூட்டம்

24—5—1955 செவ்வாய் மாலை 6 மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில்
தோழர் **கே. ஏ. மதியழகன்** தலைமையில்
தோழர் சி. என். அண்ணாதுரை
சொற்பொழிவாற்றுவார்
நன்கொடை: ரூ. 1—0—0, அணா 0—8—0

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மூட நம்பிக்கையின் கொடிய விளைவு

தொழிலாளர்களின் கைகள் கொப்பளித்தன!

'நாணய சோதனை' நடைபெற்ற விவரம்

லக்னோ, மே 20—

மிர்சாபூர் மாவட்டத்தில் நடைபெற்றுவரும் 'ரிகாண்ட்' அணைக்கட்டில் வேலை செய்யும் பொது மராமத்து இலாகா கண்டிராக்டரின் குமாஸ்தா ஒருவர், தம்முடைய கைவசமிருந்த ரூ. 50 காணாமற் போனது குறித்து, அங்குவேலை செய்த 20 தொழிலாளர்களையும் சந்தேகித்திருக்கிறார்.

ஒவ்வொருவரிடமும் தனித்தனியாகக் கேட்டுப் பார்த்தும், அந்த ரூபாயை யார் எடுத்தார்கள் என்று தெரியவராமையால், அந்தக் குமாஸ்தா, திருடியவரைக் கண்டுபிடிக்க ஒரு 'சோதனை' நடத்தியிருக்கிறார்.

அதாவது, கொதித்துக் கொண்டிருக்கும் எண்ணெயில் அந்த 20 தொழிலாளர்களும் கைவிட வேண்டுமென்றும், யார் மேற்படி திருட்டை நடத்தினரோ அவரது கை மட்டும் வெந்துவிடுமென்றும், திருடாதவர்களுக்கு தீங்கு நேராது என்றும் கூறியிருக்கிறார்.

குமாஸ்தாவின் இந்தக் 'கட்டளை'க்குக் கீழ்ப்படிந்த அந்த 'அப்பாவி' தொழிலாளர்கள் 20 பேரும், அவ்வாறே கொதிக்கும் எண்ணெயில் கை நனைத்திருக்கின்றனர்.

விளைவு—அவர்களது கைகள் அப்படியே வெந்து கொப்பளித்துவிட்டதாம்!

அந்த பரிசோதனை நடத்தின மேற்படி குமாஸ்தா எங்கோ ஓடிப்போய் தலைமறைவாக இருக்கிறார் என்றும், போலீசார் அவரைத் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அல்ஜீரியா கிளர்ச்சியை அடக்க!

பாரிஸ், மே. 19—

அல்ஜீரியாவில் தற்போது நடைபெற்று வரும் கிளர்ச்சிகளையும், கலவரங்களையும் அடக்க 19 - காலாட்படைப் பட்டாளங்களும், ஒரு சாதாரண ரெஜிமெண்டும், 2,000 போலீசாரும் அனுப்பப்பட்டு இருக்கின்றனர் என்று பிரெஞ்சு சர்க்கார் அறிவித்திருக்கிறது. ஏற்கனவே அல்ஜீரியாவிற்கு பிரெஞ்சுத் துருப்புகளும், காலாட் படைகளும், இராணுவ தளவாடங்களும் போய்ச் சேர்ண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது

தற்போது அல்ஜீரியாவில் 60,000 பிரெஞ்சுத் துருப்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கசாபிளாங்காவைச் சுற்றியுள்ள இடங்களில் தந்திக் கம்பிகளை அறுப்பது, பஸ்கள்மீது கல்லெறிவது, இரயில்வே அடையாளக் குறிகளைக் கெடுப்பது போன்ற 'நாச வேலை'கள் வரவர அதிகமாக நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

தற்போது பிரான்சிலிருந்து குவிந்துகொண்டே இருக்கும் படைகளுடன் சேர்த்து அல்ஜீரியாவில் மொத்தம் 1 லட்சம் துருப்புகள் இருக்கக்கூடுமாம்.

ஆனால் கலகப் படையினர் மொத்தமாக 1,500 பேருக்கு மேல் இருக்கமாட்டார்கள் என்றே கூறப்பட்டிருக்கிறது.

நேற்று மட்டும் இரண்டு ஐரோப்பியர்களும், ஒரு ஷேக்கும், ஒரு அல்ஜீரிய காவலாளியும் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்று தகவல் கிடைத்திருக்கிறது

ஒரு பிரயாணிகள் பஸ் தாக்கப்பட்டு தீயிடப்பட்டதுடன், ஐரோப்பியர்களுக்குச் சொந்தமான திராட்சைத் தோட்டங்களும் நாசம் செய்யப்பட்டன என்றும் பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது.

கசாபிளாங்காவில், ரம்சான் பண்டிகை நெருங்க நெருங்க, கிளர்ச்சிகளும், நெருக்கடியும் வலுத்து வருவதாகவே கூறப்படுகிறது.

திராவிட நாடு பிரசார பைகள்

★

'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற உரிமை முழக்கம் பொறிக்கப்பட்டுள்ளது, துணிப் பையில்!

கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவருகின்றன, பையின் பலவகை நிறங்கள்!

திராவிட நாட்டின் நிலப் படம் பொறிக்கப்பட்டிருக்கிறது, ஒரு புறத்தில்; திராவிடத்தின் தொழில்கள் ஓவியமாக்கி சித்தரிக்கப்பட்டிருக்கிறது, மற்றொருபுறத்தில்!

அரிய அறிவுரைகள் தாங்கி இருக்கின்றன, இரு பக்கங்களிலும்!

பெருமையுடன் கழக இலட்சிய வீரர்கள் கையிலே ஏந்திச் செல்ல ஏற்றது!

திராவிடத்தின் இலட்சிய முழக்கம் திராவிட பெருமக்களிடையே பரவுவதற்குப் பெரிதும் பயன்பட அமைந்திருக்கிறது இப் பை; காலப் போக்கில் குலைந்துவிடாத உயர்ந்த நிறங்கள் கொண்டது; நீடித்து உழைக்கும் உறுதி கொண்டதாகவும் அமைந்திருக்கிறது.

திராவிடர்கள் ஒவ்வொருவரும் தவறாமல் ஏந்திச் செல்வார்களாக —இவ்விலட்சியப் பைகளை!

இதன் விலை ரூபாய் ஒன்றே.
இதர செலவுகள் வேறு

மற்ற விபரங்களுக்கு:—

இந்துஸ்தான் பேப்ரிக்ஸ்,
தபால் பெட்டி எண் 5,
குடியாத்தம் (வ. ஆ.)

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியனுக்கு பாராட்டு விருந்து!

8—5—55ல், சென்னை தோழமைக் கழகச் சார்பில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு ஓர் பாராட்டு விருந்து நடைபெற்றது. விருந்தில், தோழியர் சத்தியவாணிமுத்து தோழர்கள் என். வி. நடராசன், அ பொன்னம்பலனார், சி. டி. டி. அரசு, மற்றும் பல முக்கியஸ்தர்களும், தோழமைக் கழக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

விருந்து முடிந்த பின், தோழமைக் கழகத் தலைவர் தோழர் எம். எஸ். முத்து, இரா. நெடுஞ்செழியன் அவர்களையும், முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களையும் பாராட்டிப் பேசினார்.

தோழர் ப சு. பழனி, பொதுச் செயலாளருக்குக் கைத்தறி ஆடை அணிவித்தார்.

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தான் தோழமைக் கழகத்திற்கு இதுவரை பாதுகாப்பாளராக இருந்து ஆற்றிய உதவியைப் போல் இனிமேலும் செய்து கழகப் பணியை ஆற்றுவதாகவும், தொண்டர்படை தேவைப்படும்போது தோழமைக் கழகத்திற்கு அழைப்பு வருமென்றும், அதுபோது கழகப் பணியை மேற்கொண்டு தனக்கு உதவி புரிய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன், எம். ஏ.